KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 09.11.2016

| Date of Council meeting | Deceison Number | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 09.11. 2016 | 1308 | பொருள் எண் :1<br><br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கியிருப்பதால் மழைநீர் தெருக்கள் மற்றும் பிற இடங்களில் தேங்கி கொசு உற்பத்தி மற்றும் துர்நாற்றம் வீச தொடங்கும் என்பதால் தேங்கிய மழைநீரில் பிளிச்சிங் பவுடர் சுண்ணாம்பு பவுடர் போன்றவை தெளிக்க வேண்டியிருப்பதால் இரண்டு டன் பிளிச்சிங் பவுடர் சுண்ணாம்பு பவுடர் மற்றும் 200 லிட்டர் பினாயில் போன்றவை வாங்க மன்ற அனுமதிக்கு. இதன் உத்தேச மதிப்பு இரண்டு லட்சம் ஆகும்<br><br>அலுவலகக்குறிப்பு :<br><br>1 .அனுமதி வழங்கலாம்<br><br>2. இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1309 | பொருள் எண் :2<br>காயல்பட்டணம் நகராட்சி அலுவலகத்தின் ஜெராக்ஸ் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் நகராட்சி அலுவலகத்தில் ஜெராக்ஸ் எடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் அலுவலக அவசர பணிகள் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் உள்ளாட்சி தேர்தல் பணிகள் மேற்கொள்ளப்படும் முன் அவசர அவசியம் கருதி தற்போது உள்ள ஜெராக்ஸ் இயந்திரத்தினை மறு விலைக்கு கொடுத்து புதிய ஜெராக்ஸ் இயந்திரத்தினை D.G.S. விலைக்கு வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.60000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br>2. இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | 1310 | பொருள் எண் :3<br>இந்நகராட்சியின் பொதுசுகாதார பிரிவு வாகனம் (சுவராஜ் மஸ்தா) TN69S0146 ஆகஸ்ட்/2016-ம் மாதம் தகுதிச்சான்று முடிவடைந்து விட்டதால் மழைக்காலம் வர உள்ளதை முன்னிட்டு சுகாதார வாகனம் சீராக இருக்க வேண்டியுள்ளதாலும் இவ்வாகனத்திற்கு பழுது நீக்க பணிகள் செய்வதற்கும் தகுதிச்சான்று பெறுவதற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதியான ஒப்பந்தபுள்ளிக்கு ஒப்பந்தபுள்ளி விலையின்படி பழுது நீக்கப்பணி செய்ய செலவு தொகையினை நகராட்சியின் அவசரம் மற்றும் சுகாதார அவசியம் கருதி விதி எண் 15-ன் கீழ் வழங்குவதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு<br>அனுமதி வழங்கலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1311 | பொருள் எண் :4<br>காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது குடிநீர் வழங்குவதற்கு வறட்சியின் காரணமாக ஆற்றில் நீர் வரத்து குறைந்திருப்பதால் பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது இது குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ மூலம் ஒலி பெருக்கி விளம்பரம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><br>வ.எண் \| நிறுவனத்தின் பெயர் \| தொகை(ரூ)<br>1 \| அமீர் சவுண்ட் சர்வீஸ் \| 3300/-<br>2 \| ஹேப்பி சவுண்ட் சர்வீஸ் \| 3200/-<br>3 \| பாத்திமா சவுண்ட் சர்வீஸ் \| 3000/-<br><br>மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1(ம) 2 ஐ விட வரிசை எண் 3 பாத்திமா சவுண்ட் சர்வீஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த பாத்திமா சவுண்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி விளம்பரம் மேற்கொண்ட வகைக்கு பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க அனுமதிக்கு<br><br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br>2. இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 1312 | பொருள் எண் :5<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் தனியார் மூலம் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தலைமை செயலகம் சென்னை அவர்களின் மூலமாக மாநில அளவில் தமிழ்(தினத்தந்தி) மற்றும் ஆங்கில செய்தி நாளிதழில் (டெக்கான் குரோனிக்கல்) விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.150586/-(ரூபாய் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரத்தி ஐநூற்றி எண்பத்தி ஆறு மட்டும்) கிரின்வேஸ் அட்வர்ட்டைசிங் பப்ளிசிட்டி சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br><br>1.அனுமதி வழங்கலாம்<br><br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | | | |

1313

**மன்றப்பொருள்:6**

காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதி பணிகள் 2016-17 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 04.08.2016 அன்று முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தகாரார் பெயர்/ முகவரி | ஒப்பந்த வகை (மதிப்பீடு ரேட்டுக்கு) |
|---|---|---|---|---|
| 1 | காயல்பட்டணம் நகராட்சியில் தாயிம்பள்ளியிலிருந்து சின்னநெசவுத் தெரு வரை கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகாலில் மேல் மூடி அமைத்தல் | 5.25 | திரு.ஆர்.தலவானி முத்து,காயல்பட்டணம் | 0.43% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| | | | திரு.எஸ்.குமரேசன், திருச்செந்தூர் | 0.86% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |
| 2 | காயல்பட்டணம் நகராட்சியில் 18வது வார்டுக்குட்பட்ட வடக்கு முத்தாரம்மன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள | 4.00 | திரு.எஸ்.குமரேசன், திருச்செந்தூர் | 0.09% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| | | | திரு.எஸ்.பால்ராஜ், கீழக்கரை | 0.06% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | <table><tr><td></td><td>மழைநீர் வடிகாலில் மூடி அமைத்தல்</td><td></td><td></td><td></td></tr></table><br><br>மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கிகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br><br>1.அனுமதி வழங்கலாம்.<br><br>2. இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | |
| | 1314 | **மன்றப்பொருள்:7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் கடந்த 2015 ம் ஆண்டு வடகிழக்கு பருவமழையின் காரணமாக காயல்பட்டணத்தில் அதிக அளவு மழை பெய்ததால் நகராட்சிப்பகுதிகளில் ஆங்காங்கே மழைநீர் தேங்கி பொதுமக்களின் இயல்ப வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் கடந்தாண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகப்படியான மழை காயல்பட்டணத்தில் பெய்ததால் நகராட்சியில் எல்லாப்பகுதிகளிலும் மழைநீர் அதிக அளவு தேங்கியது . மேலும் நகராட்சியில் போதுமான மழைநீர் வடிகால் வசதி இல்லாததால் ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்தி கால்வாய்தோண்டி மழைநீரை வெளியேற்ற நகராட்சியின் மூலம் போர்க்கால அடிப்படையில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆதலால் தற்பொழுது இந்தாண்டு (2016) வடகிழக்கு பருவ மழை காலம் துவங்கியுள்ளதால் சென்ற வருடத்தைப்போன்று பாதிப்புகள் ஏதும் ஏற்படாத வண்ணம் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் ,தூத்துக்குடி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மழைநீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து தேங்கும் மழைநீர் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எளிதில் வடிந்தோடும் விதமாக ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்தி கால்வாய்தோண்டி மழைநீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தயார் நிலையில் இருப்பதற்கும் ஜே.சி.பி பயன்படுத்தி பணி செய்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு:<br><br>1.அனுமதி வழங்கலாம்<br><br>2. இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | |
| | 1315 | **மன்றப்பொருள்:8**<br>வடகிழக்கு பருவ மழை 2016ன் காரணமாக தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகராட்சியின் மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை உடனடியாக ஆயில் இஞ்சின் பயன்படுத்தி வெளியேற்றும் பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.9.00இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br><br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | 1316 | **மன்றப்பொருள்:9**<br>வடகிழக்கு பருவ மழை 2016ன் காரணமாக தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகராட்சியின் மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஜே.சி.பி இயந்திரம் மற்றும் ஆயில் இஞ்சின் பயன்படுத்தி வெளியேற்ற முடியாத இடங்களில் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் டேங்கர் வாகனம் பயன்படுத்தி உறிஞ்சி எடுத்து அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.6.00இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | 1317 | **மன்றப்பொருள்:10**<br><br>வடகிழக்கு பருவமழை 2016ன் காரணமாக நகராட்சியின் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஜே.சி.பி இயந்திரம் பயன்படுத்தி வெளியேற்றும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1) திரு.ஆர்.தலவானி முத்து,<br>R.T.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரூ. 800/- (ஒரு மணி நேரத்திற்கு)<br>38,பூந்தோட்டம்,காயல்பட்டணம்<br>2) ஸ்ரீ எர்த் மூவர்ஸ்,பைபாஸ் ரோடு, ரூ. 850/- (ஒரு மணி நேரத்திற்கு) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | குலசேகரப்பட்டணம்<br>3) திரு.எஸ்.குமரேசன்,<br>கே.கே.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரூ. 900/- (ஒரு மணி நேரத்திற்கு)<br>12,வணிக வளாகம்,<br>திருச்செந்தூர்.<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.ஆர்.தலவானி முத்து,காயல்பட்டணம் என்பவர் குறைவான விலைப்புள்ளி(ரூ. 800/- ஒரு மணி நேரத்திற்கு) கொடுத்துள்ளார். மேற்படி வரப்பெற்ற குறைவான விலைப்புள்ளியை அங்கிகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | |
| | 1318 | மன்றப்பொருள்:11<br>வடகிழக்கு பருவமழை 2016ன் காரணமாக நகராட்சியின் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இஞ்சின் பயன்படுத்தி வெளியேற்றும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1) திரு.ஆர்.தலவானி முத்து,<br>R.T.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஆயில் இஞ்சின் வாடகை ரூ. 1400/-(ஒரு நாள்)<br>38,பூந்தோட்டம், பயன்படுத்தாத நாள் மட்டும்<br>காயல்பட்டணம். ஆயில் இஞ்சின் பயன்படுத்தரூ.370/- ஒரு மணி | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | நேரத்திற்கு<br><br>2) திரு.T.மாதவன், ஆயில் இஞ்சின் வாடகை ரூ. 1200/-(ஒரு நாள்)<br>மாதவன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், பயன்படுத்தாத<br>நாள் மட்டும் ஓடக்கரை,காயல்பட்டணம் ஆயில் இஞ்சின் பயன்படுத்த<br>ரூ.350/- ஒரு மணி நேரத்திற்கு<br><br>3) திரு.எஸ்.குமரேசன்,<br>கே.கே.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஆயில் இஞ்சின் வாடகை ரூ. 1300/-(ஒரு நாள்)<br><br>12,வணிக வளாகம், ஆயில் இஞ்சின் பயன்படுத்த ரூ.400/- ஒரு மணி நேரத்திற்கு<br>திருச்செந்தூர்.<br><br>மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு. T.மாதவன் ,காயல்பட்டணம் என்பவர் குறைவான விலைப்புள்ளி (ஆயில் இஞ்சின் ஒரு நாள் வாடகை ரூ. 1200/-(பயன்படுத்தாத நாள் மட்டும்) (ஆயில் இஞ்சின் பயன்படுத்த ரூ.350/- ஒரு மணி நேரத்திற்கு) கொடுத்துள்ளார். மேற்படி வரப்பெற்ற குறைவான விலைப்புள்ளியை அங்கிகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | |

| | | | |
|---|---|---|---|
| | 1319 | **மன்றப்பொருள்:12**<br><br>வடகிழக்கு பருவமழை 2016ன் காரணமாக நகராட்சியின் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஜே.சி.பி இயந்திரம் மற்றும் ஆயில் இஞ்சின் பயன்படுத்தி மழைநீரை வெளியேற்ற முடியாத இடங்களில் 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் டேங்கர் வாகனம் மூலம் மழைநீரை உறிஞ்சி வெளியேற்றும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>1) திரு.ஆர்.தலவானி முத்து,<br>R.T.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரூ. 1400/- (ஒரு வண்டி லோடு)<br>38,பூந்தோட்டம்,காயல்பட்டணம்<br><br>2) திரு.T.மாதவன்,<br>மாதவன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரூ. 1350/- (ஒரு வண்டி லோடு)<br>ஓடக்கரை,காயல்பட்டணம்<br><br>3) திரு.எஸ்.குமரேசன்,<br>கே.கே.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ரூ. 1300/- (ஒரு வண்டி லோடு)<br>12,வணிக வளாகம்,<br>திருச்செந்தூர்.<br>மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.எஸ்.குமரேசன் , திருச்செந்தூர் என்பவர் குறைவான விலைப்புள்ளி (ரூ. 1300/- ஒரு வண்டி லோடு ) கொடுத்துள்ளார். மேற்படி வரப்பெற்ற குறைவான விலைப்புள்ளியை அங்கிகரிக்க அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1320 | **மன்றப்பொருள்:13**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் பணியில் ஒரு குழாய் பொருத்துநர் மற்றும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி காவலர் ஆகிய இருவர் மட்டும் இருப்பதாலும் போதிய நிரந்தர பணியாளர்கள் வேறுஎவரும் இல்லாததாலும் குடிநீர் விநியோகம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.மேலும் குடிநீர் பணியின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு சுகாதாரப்பிரிவு பணியாளர்களை பயன்படுத்தி தற்பொழுது குடிநீர் விநியோகப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் இடங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட டிராக்டர் டேங்கர் வாகனம் ஒன்றும் உள்ளது.இவ்வாகனத்தையும் சுதாரப்பணியாளரை பயன்படுத்தியே இயக்கப்பட்டு வருகிறது. அதனால் சுகாதாரப்பணியாளர்களை குடிநீர் விநியோகப்பணிக்கு பயன்படுத்துவதால் சுகாதாரப்பணிகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் குடிநீர் விநியோகப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு குடிநீர் வாகனத்தை இயக்குவதற்கு **ஒரு ஓட்டுநரும் குடிநீர் விநியோகப்பணிக்கு ஐந்து நபர்களும் ஆக மொத்தம் 6 நபர்களை** தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ளவும் அவர்களுக்குரிய ஊதியத்தை தமிழ்நாடு அரசு விலைவிகிதப்பட்டியல் (Schedule of Rates) அடிப்படையில் வழங்கிடவும்,ஒரு வருடத்திற்குரிய மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ. 665000/- க்கு அனுமதி | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br>2. குடிநீர் பணியின் அவசியத்தை கருதி மேற்கண்டவாறு தற்காலிக பணியாளர்களை நியமிக்கவும் அதற்குரிய மதிப்பீட்டுத்தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 1321 | மன்றப் பொருள்:14<br>காயல்பட்டணம் நகராட்சியில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>1. காயல்பட்டணம் நகராட்சியில் 12வது வார்டுக்குட்பட்ட பூந்தோட்டத்தில் காயிதே மில்லத் நகர் மெயின் சாலை சிறுபாலம் கட்டுதல்.<br>2. காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி அலுவலக வளாகத்தில் 4 கடைகள் கட்டுதல்.<br>3. காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி அலுவலக வளாகத்தில் வாகன பாதுகாப்பு அறை கட்டுதல்.<br>4. 3வது வார்டுக்குட்பட்ட பிலால் பள்ளி தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.<br>மேற்படி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை மாவட்ட அளவில் தினக்குறள் (ம) தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு உரிய பட்டியல் தொகை ரூ.19176/—னை தினபூமி நாளிதழ் (ம) ரூ.17600/—னை தினக்குறள் நாளிதழ் நிறுவனத்திற்கும் நகராட்சி பொதுநிதியிலிருந்து வழஙக அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br>2. இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1322 | பொருள் எண் :15<br><br>காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சி கஸ்டம்ஸ் சாலையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நகராட்சி மூலம் கொடுக்கப்பட்ட அறிவிப்பு சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD) No.15560/2016 என்ற வழக்கினை K.S.பாத்திமா பத்தூல் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார்<br>இந்த வழக்கினை நகராட்சி சார்பாக எதிர்உரை வாதாட அரசு வழக்கறிஞர் திரு.M.ராஜராஜன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.10000/- வழங்க் முன் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br><br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | 1323 | பொருள் எண் :16<br><br>காயல்பட்டணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சி கஸ்டம்ஸ் சாலையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நகராட்சி மூலம் கொடுக்கப்பட்ட அறிவிப்பு சம்மந்தமாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD) No.15694/2016 என்ற வழக்கினை செய்யது ரபீல் பீவி என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார்<br>இந்த வழக்கினை நகராட்சி சார்பாக எதிர்உரை வாதாட அரசு வழக்கறிஞர் திரு.M.ராஜராஜன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.10000/- வழங்க் முன் அனுமதிக்கு<br><br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br><br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1324 | பொருள் எண் :17<br>காயல்பட்டணம் நகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்க்க தூத்துக்குடி ADJ-II கோர்ட்டில் OS.No.105/2016 என்ற வழக்கில் பாத்திமா பத்தூல் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கினை சம்மந்தமாக நகராட்சி ஆணையாளர் ஆட்சேபணையை எடுத்துரைக்க A.அமிர்தராஜ் என்ற வழக்கறிஞர் நியமிக்கப்பட்டுள்ளது அன்னாருக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/- (ஐந்தாயிரம் மட்டும்) வழங்க அனுமதிக்கும்.<br><br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br><br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | 1325 | பொருள் எண் 18<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுநிதி பணிகள் 2014-2015-ன் கீழ்(9 தெரு விளக்கு பணிகள்) பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட இரண்டாவது அழைப்பு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் மூலமாக மாவட்ட அளவில் தினபூமி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ.26696/-தின பூமி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | 1326 | பொருள் எண் :19<br><br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் மத்திய அரசின் வீட்டு வசதி வாரியத்தின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் (பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டம்) செயல்படுத்தப்படஉள்ளது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் இனவாரியாக களப்பணி செய்து வீட்டு வசதி கேட்புப்பட்டியல் தயார் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின் படி மேற்கண்ட பணியினை தொண்டு நிறுவனம் மூலம் களப்பணி செய்து அறிக்கை தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது. அவ் அறிவுறுத்தலின்படி நம் நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளுக்கும் 18 நபர்கள் மூலம் Mother Social Service Trust மூலம் பணி மேற்கொள்ளவும் பணி செய்தமைக்கு வார்டு 1-க்கு தோராயாக ரூ.10000/- வீதம் மொத்தம் 180000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.இச்செலவினத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ளலாம் | அனுமதிக்கப்பட்டது |
| | | | |